# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப.,(ஓ)

*******

முறையீட்டு மனு எண். 040/ந/2018

நாள் : 29/05/2019

**திரு. கா. சுப்பராயன்,
3/139 , பாரதி நகர்,
மோகனூர் ரோடு,
நாமக்கல் 637 001.** – **முறையீட்டு மனுதாரர்**

1. **திரு. செந்தில் முருகன்,
நகராட்சி ஆணையாளர்,
நாமக்கல் நகராட்சி.** – **எதிர் மனுதாரர்கள்**

2. **திரு. கமலநாதன்,
நகராட்சிப் பொறியாளர்,
நாமக்கல் நகராட்சி.**

## ஆணை

முறையீட்டு மனுதாரர் திரு. கா. சுப்பராயன் என்பவரது 07.03.2017 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு முறையீட்டு மனு எண்.0040/2017 ஆக பதிவு செய்யப்பட்டது. மேற்படி மனு குறித்து உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டும் வாக்குமூலங்கள் மற்றும் அறிக்கைகள் பெறப்பட்டு, முறையே பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறான ஆணை வெளியிடப்படுகிறது.

மேற்படி முறையீட்டு மனுவில், நாமக்கல் நகராட்சி 38-வது வார்டில் முல்லை நகர், அழகு நகர், அன்பு நகர் போன்ற குடியிருப்புப் பகுதிகள் உள்ளதாகவும் அவை தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய வீட்டு வசதிப் பிரிவால் அமைக்கப்பட்டு கொண்டிசெட்டிப்பட்டி ஊராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும், மேற்படிப் பகுதிகளில் குடிநீர் வசதிக்காக பல ஆழ்துளைக் கிணறுகள் அமைத்தும், மேல் நிலை நீர்த் தேக்கத்தொட்டிகள் கட்டியும், தெருக் குழாய்கள் பதித்தும், வீடுகளுக்கு குடிநீர் இணைப்புகள் வழங்கியும் செலவுத் தொகை தவணைகளாகப் பெறப்பட்டு விற்பனை ஆவணங்கள் அனைத்தும் உரிமையாளர்களுக்குத் தரப்பட்டுவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு கட்டத்தில் சேலம் வீட்டு வசதிப் பிரிவினால் மேற்கண்ட பகுதிகளில் குடிநீர்த் தொட்டிகள், வீட்டுக் குடிநீர் இணைப்புகள், பொதுப் பயன்பாட்டுக் காலியிடங்கள் ஆகிய அனைத்தும் கொண்டிசெட்டிப்பட்டி ஊராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டுவிட்டதாகவும், மேற்கண்ட ஊராட்சி நாமக்கல் நகராட்சியுடன் இணைக்கப்பட்டபொழுது மேற்கண்ட வசதிகள் அனைத்தும் நாமக்கல் நகராட்சியால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்கண்ட மூன்று குடியிருப்புகளிலும் நகராட்சி ஏற்றுக்கொண்ட நாள் முதல் வீட்டு வரியினைத் தவறாமல் வசூல் செய்து வருவதாகவும், ஆனால்

குடிநீர் விநியோகப் பணியினையும், துப்புரவுப் பணியையும் தனியார் ஏஜென்சிகளுக்கு விட்டு அவை மாதந்தோறும் ரூ.400/- என்ற அளவில் இரசீது கொடுத்து பகிரங்கமாக வசூல் செய்து வருவதாகவும் புகார் கூறப்பட்டுள்ளது.

மேலும், நலச் சங்கங்கள் வாயிலாகத் துண்டறிக்கை வெளியிடப்பட்டுள்ளதாகவும் அதில் நகராட்சிக்கு குடிநீர் காப்புத் தொகையாக ரூ.3000/- தங்களிடம் செலுத்த வேண்டுமெனவும், தொடர்ந்து தாங்களே குடிநீர் விநியோகப் பணிகளைச் செய்ய இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்கண்டவாறான பணிகளைத் தனியார் ஏஜென்சிகள் செய்வதாகக் குறிப்பிட்டு அதனை ஆட்சேபித்துத் தக்க நடவடிக்கை கோரி முறையீட்டு மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி முறையீட்டு மனு மீதான அறிக்கையினை சமர்ப்பிக்குமாறு இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை மூலம் நாமக்கல் நகராட்சி ஆணையருக்கு ஆணையிடப்பட்டது. நேரில் ஆஜராகி தனது தரப்பிலான விளக்கங்களை பதிவு செய்திடுமாறு தெரிவித்து மனுதாரருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. அதன்படி விசாரணைக்கு ஆஜரான மனுதாரர் தனது முறையீட்டு மனுவில் குறிப்பிட்டுள்ள குற்றச்சாட்டுக்களை மீள வலியுறுத்தி தனது வாக்குமூலத்தினை சமர்ப்பித்துள்ளார். மேலும், மனுவில் குறிப்பிடாத சில கூடுதல் புகார்களையும் உள்ளடக்கிய தனது எழுத்துபூர்வான கூடுதல் வாதுரை ஒன்றினையும் மனுதாரர் சமர்ப்பித்துள்ளார்.

மனுதாரர் தரப்பு சாட்சிகளில் ஒருவாரான திரு. இராம ஆறுமுகம் என்பவர் நேரில் ஆஜராகி மனுதாரர் திரு. கா. சுப்புராயன் அவர்களுடைய மனு விவரம் மற்றும் வாக்குமூலத்தைத் தான் ஏற்றுக்கொள்வதாக வாக்குமூலம் அளித்துள்ளார்.

மனுதாரரது வாக்குமூலம் மற்றும் கூடுதல் வாதுரைகள் மீதான விவரங்களடங்கிய அறிக்கையினை அனுப்பிவைக்குமாறு இம்முறைமன்ற நடுவத்தால் நாமக்கல் நகராட்சி ஆணையருக்கு ஆணையிடப்பட்டது.

நாமக்கல் நகராட்சி ஆணையாளர் தனது அறிக்கையில் கீழ்க்கண்டவாறான விவரங்களை சமர்ப்பித்துள்ளார்.

"சேலம் வீட்டு வசதி வாரியத்தால் குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டு இது வரையில் முல்லை நகர் நலச் சங்கத்தின் மூலம் பராமரிக்கப்பட்டு வந்தது. ஊராட்சி மூலம் நாமக்கல் நகராட்சியுடன் இணைக்கப்பட்ட போது நகராட்சி வசம் எந்த இணைப்பும் ஒப்படைக்கவில்லை. தற்போது முல்லை நகர் பொதுமக்கள் காவிரி குடிநீர் இணைப்பு வழங்கக் கேட்டுக் கொண்டதன்பேரில், குடிநீர் உபவிதிகளின்படி வசூலிக்க வேண்டிய காப்புத் தொகை வசூலிக்கப்பட்டுள்ளது.

முல்லை நகர் பகுதியில் எந்த தனியார் ஏஜென்சிகளுக்கும் பணம் வசூலித்து குடிநீர் வழங்க நகராட்சி அனுமதி ஏதும் வழங்கவில்லை. முல்லை நகர் நலச்சங்கம் மூலம் ஊராட்சி நிர்வாகத்தின் போது செயல்பட்டு வந்ததை தற்போது நகராட்சி எடுத்துக் கொள்ளும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நகராட்சி நிர்வாகம் தன்னிச்சையாக தன் வசம் எடுத்துக் கொள்ளவில்லை. ஊராட்சி நிர்வாகம் ஒப்படைப்பு செய்ததன் அடிப்படையில் தான் எடுத்துக் கொள்ளப்பட்டது.

நாமக்கல் நகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ள 9 ஊராட்சிப் பகுதிகளில் ஏற்கனவே குடிநீர் இணைப்பு உள்ள ஊராட்சிகள் நகராட்சியுடன் ஒப்படைக்கும் போது அளித்த பட்டியலின்படி இணைப்புகள் நகராட்சி வசம் எடுத்துக் கொள்ளப்பட்டது. அதே அடிப்படையில் நகராட்சி மூலம் குடிநீர் கட்டணம் மட்டும் வசூலிக்கப்படுகிறது. பழைய இணைப்புகள் என்ற அடிப்படையில் நகராட்சி குடிநீர் உப விதிகளின்படி பராமரிக்கப்பட்டு வருகிறது.

நகராட்சியால் தற்பொழுது வரை மனுதாரரால் குறிப்பிடப்பட்ட எந்த மாதாந்திர கட்டணமும் வசூலிக்கப்படவில்லை. இனிவரும் காலங்களில் தற்போது முன்வைப்புத் தொகை செலுத்திய இணைப்புதாரர்களிடமிருந்து நகராட்சி மூலம் மாதாந்திர கட்டணம் நகராட்சியின் கட்டண விகிதத்தில் வசூலிக்கப்படும் என உறுதி செய்து நகராட்சி ஆணையர் தனது அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார்.

மனுதாரரது கோரிக்கைகள் தொடர்பாக மேற்கொண்டவாறு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக நகராட்சி ஆணையரது அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், இப்பொருள் தொடர்பாக தொடர்ந்து முறையாகக் கண்காணித்து எவ்விதப் புகாருக்கும் இடமளிக்காமல் செயல்படுவதை உறுதி செய்துகொள்ள வேண்டுமென நாமக்கல் நகராட்சி ஆணையர் மற்றும் சேலம் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் ஆகியோருக்கு வலியுறுத்தி அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

**2019–ஆம் ஆண்டு, மே திங்கள், 29–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.**

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

**செயலாளர்.**
31.5.19

பெறுநர்

1. திரு. கா. சுப்பராயன்,
   3/139 , பாரதி நகர்,
   **மோகனூர் ரோடு,**
   **நாமக்கல் – 637 001.**

2. **திரு. செந்தில் முருகன்,**
   **நகராட்சி ஆணையாளர்,**
   **நாமக்கல் நகராட்சி, நாமக்கல் மாவட்டம்.**

3. திரு. கமலநாதன்,
   **நகராட்சிப் பொறியாளர்,**
   **நாமக்கல் நகராட்சி, நாமக்கல் மாவட்டம்.**

4. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,
   **சேலம் மண்டலம், சேலம்.**

**நகல் :** முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
**பிரிவு அலுவலர் (நிர்வாகம்)**
**பேரூராட்சி பிரிவு – 3**
**இ.கோ. / உதிரி**